# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

## <u>கூட்டப்பொருள்</u>

2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 09.09.2019 | **1)**தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர் திட்டப் பணி மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகள் மற்றும் சேதமடைந்த சாலைகளை மேம்படுத்திடவும், தார்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைக்க ரூ. 1510.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2019–20 (TURIP)இன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப இவ்வலுவலக மாமன்றத் தீர்மானம் எண். 163 நாள் 16.08.2019இல் ஒப்புதல் செய்துள்ளது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 17349/2019/இ3 03/09/2019 நாளிட்ட கடிதத்தில் அரசு முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை தூத்துக்குடி மாநகராட்சியின் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்புடையதாயின் மாமன்றத் தீர்மானம் இயற்றி உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. | | | **164)** அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது.. |
| மாநகராட்சி யின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்யநிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி/நில அபிவிருத்திக் கட்டணம் | மாநகராட்சி பங்களிப்பு |
| தூத்துக்கு டி | 15,10 | 1.00 | 12.00 | 2.10 |
| | எனவே தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் 2019–20 (TURIP) இன் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள நிதி ஒதுக்கீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/2674/2019 | | | |
| | **2)** தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல பகுதிக்குட்பட்ட இந்திரா நகர் பகுதியில் குடிநீர் திட்டப் பணியில் கட்ட உத்தேசிக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தினை பாதுகாக்கும் பொருட்டு அதனை சுற்றி சுற்றுசுவர் அமைக்க ரூ. 9.30 இலட்சம் மதிப்பீட்டில் பணிகளை செய்வதற்கு திரு.ஜெ சுரேஷ் ஜெயக்குமார் | | | **165.** அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஒப்பந்ததாரருக்கு 30.03.2017ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது.<br>இந்நிலையில், வேலை உத்திரவு வழங்கப்பட்ட சமயம் மேற்படி நீர்த்தேக்க தொட்டியின் பணிகள் நடைபெற்று கொண்டிருந்ததால் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள் துவக்கப்படாமல் இருந்தது. தற்போது மேற்படி நீர்த்தேக்க தொட்டி பணிகள் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வந்துள்ளபடியால் மேற்கண்ட பணிகளை செய்யக்கோரி ஒப்பந்ததாரரிடம் கோரப்பட்டதில் மேற்கண்ட பணிக்கான மதிப்பிட 2016–2017ல் தயார் செய்யப்பட்டதால் தற்பொழுது உள்ள விலைவிகிதத்தில் மேற்படி பணியினை செய்ய இயலாத சூழ்நிலை இருந்து வருகிறது என தெரிவித்துள்ளார். எனவே தற்போதுள்ள விலைவிகிதத்தின்படி மறுமதிப்பீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் ஏற்கனவே மேற்படி பணிக்கு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவினை ரத்து செய்தும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு மறுமதிப்பீடு தயார் செய்து பணிகள் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தாரருக்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவினை ரத்து செய்து மேற்படி சுற்று சுவர் அமைக்கும் பணிக்கு மறு மதிப்பீடு தயார் செய்ய அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். இ2/3985/2019 | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.09.09.2019